DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| STC.No. | 822/2023 |
| Prosecution: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | சரவணன் |
| **Father Name** | ~ | |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 04.07.2025.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் தோல் சம்பந்தமான தொழில் செய்து வருகிறேன். என்ன படித்துள்ளேன் என்றால் தோல் பொருள் சம்பந்தமாக பட்டய படிப்பு படித்துள்ளேன். 25.8.2022 தேதியிட்ட ம.சா.ஆ.5 ஆவணத்தில் எதிரி எனக்கு நண்பர் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் எதிரி என்னை அணுகி ரூ.31,50,000/- கடனாக கேட்டதாக குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான்.

அந்த அறிவிப்பில் 2010 முதல் 2020 வரை எதிரிக்கு பல தவணையில் ரொக்கமாக பணம் கொடுத்ததாக குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.5ல் எதிரி என்னை எப்போது கடன் கேட்டதாக குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் 2018 ம் ஆண்டு என குறிப்பிடப்பட்டு உள்ளது. (சாட்சி ம.சா.ஆ.5 ஆவணத்தை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறார்). ம.சா.ஆ.5 ஆவணத்தில் எதிரி என்னிடம் 2018ம் ஆண்டு கடன் கேட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் 2010 முதல் 2020 வரை நான் எதிரிக்கு தொகை கொடுத்து வந்ததாக குறிப்பிட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல.

ம.சா.ஆ.5 ஆவணத்தில் எதிரி என்னிடம் பெற்றதாக சொல்லப்படும் கடன் தொகையை எப்போது திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டதாக குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ.5 ஆவணத்தில் எதிரிக்கு 2010 முதல் 2020 வரை பணத்தை கொடுத்து வந்ததாக குறிப்பிட்ட நிலையில் அவ்வாறு கொடுக்கப்பட்ட தொகையில் எதிரி திருப்பி செலுத்தியதாக குறிப்பிடவில்லை என்றால் நான் அதனை சரியாக கவனிக்கவில்லை.

2010 முதல் 2020 வரை எதிரிக்கு பணம் கொடுத்தது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் பணம் வாங்குவார். பின்பு என்னிடம் திருப்பி செலுத்தி விடுவார். எதிரிக்கு ரூ.31,50,000/- தொகை கொடுத்தற்கான ஏதேனும் ஆவணம் எழுதி பெற்றுள்ளேனா என்றால் காசோலை பெற்றுள்ளேன். எதிரி என்னிடம் கடன் பெறும்போது எவ்வளவு தொகைக்கு கடன் பெறுகிறாரோ அந்த தொகைக்கு உண்டான காசோலை கொடுப்பார். பணத்தை திருப்பி செலுத்தி விட்டு காசோலையை திருப்பி பெற்று சென்று விடுவார்.

எதிரிக்கு வட்டிக்கு கடன் தொகை கொடுத்து வந்தேன் என்றால் சரிதான். ம.சா.ஆ. 1ல் குறிப்பிட்டுள்ள தொகை மற்றும பெயர் யார் எழுதினார் என்றால் எதிரிதான் எழுதினார். ம.சா.ஆ.1 எதிரி கையொப்பம் மட்டும் செய்து தொகை நிரப்பாமல் பொறுப்புறுதிக்காக காசோலை வழங்கினார் என்றால் ம.சா.ஆ.1ல் யார் பூர்த்தி செய்தார் என்று எனக்கு தெரியாது. ஆனால் ம.சா.ஆ.1யை எதிரிதான் என்னிடம் கொடுத்தார். ம.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள உறுதிமொழி ஒப்பந்த பத்திரத்தில் ரூ.31,50,000/– எதிரி எனக்கு செலுத்த வேண்டிய தொகை என்றும் அதில் ரூ.4,00,000/–ஐ 2020 ம் ஆண்டு திருப்பி கொடுத்து விட்டதாக குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் ஆம்.

ம.சா.ஆ.8ல் மீதி தொகை ரூ.27,50,000/– இரண்டு மாதத்தில் திருப்பி செலுத்தி விடுவதாக குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணத்தின் அடிப்படையில் 2022ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பாக்கி தொகையை செலுத்தி இருக்க வேண்டும் என்றால் சரிதான். ம.சா.ஆ.8 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் எதிரி காசோலை திருப்பி செலுத்தவில்லை. அதன் பின்னிட்டு எதிரி என்னிடமிருந்து தொகையை பெற்றுக்கொண்டு ரூ.40,00,000/– திருப்பி செலுத்த வேண்டி இருந்தது. அந்த தொகையில் ரூ.20,00,000/– மற்றும் ரூ.20,00,000/– என இரண்டு தொகைகளுக்கு தனித்தனியாக இரண்டு காசோலைகள் கொடுத்தார்.

ம.சா.ஆ.8 ஆவணத்தின் அடிப்படையில் எதிரி எனக்கு குறிப்பிட்ட தொகையை திருப்பி செலுத்தாததால் எதிரி என்னிடம் ஏற்கனவே கொடுத்திருந்த காசோலையை நிரப்பி ஆகஸ்ட் மாதம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

ம.சா.ஆ.8 ஆவணத்திற்கு பின்னிட்டு எதிரி என்னிடம் எவ்வித தொகையும் பெறவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன தேதி குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் 06.8.2021 என குறிப்பிடப்பட்டு உள்ளது. ம.சா.ஆ.1 ஆவணத்தின் காசோலை எண் எது என்றால் 000914 ஆகும். ம.சா.ஆ.3ல் என்ன தேதி குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் 08.08.2022 என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. ம.சா.ஆ.3ல் காசோலை எண் எது என்றால் 000912 ஆகும். ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.3 ஆவணங்கள் ஏற்கனவே எதிரி என்னிடம் கொடுத்த ஆவணம் என்றாலும் நான் அதில் நீண்ட வரிசை எண்ணில் உள்ள காசோலைக்கு முன் தேதியிட்டும் வரிசை எண் குறைவாக உள்ள காசோலைக்கு பின் தேதியிட்டும் தவறாக காசோலை நிரப்பி உள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் மெட்டீரியல் திருத்தம் செய்யப்பட்டு காசோலை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு காசோலையானது சட்டப்படியான கடனுக்காக வழங்கப்பட்ட காசோலை கிடையாது என்றாலும் 60 சதவீத வட்டிக்கு கூடுதல் தொகை குறிப்பிட்டு தவறாக காசோலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. 2 சதவீதம் வட்டி மட்டும் தான் பெற்றேன்.

நான் தாக்கல் செய்த வழக்கில் வட்டிக்கு தொகை கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. இரண்டு காசோலைகளுக்கும் சேர்த்து ஒரே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். இரு வேறு கடன்கள் இரு வேறு தேதியில் பரிவர்த்தனை ஏற்பட்ட நிலையில் நான் ஒன்றாக இரண்டு வழக்கு மூலத்தையும் குறிப்பிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது

செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய்யான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உண்மையை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.